20.11.2025.
IDOP.No.45/2023

எம. சா. 1 ஞானப்பிரகாரம் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :–

நான் பிஇ, எம்பிஏ, எம்.எஸ் படித்துள்ளேன். எங்கள் திருமணம் பெற்றோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணம் என்றால் சரிதான். நான் வெளிநாட்டில் இருக்கும்போதே எங்கள் திருமணம் நிச்சயிக்கப்பட்டது என்றால் சரிதான். நிச்சயம் செய்யப்பட்டபோது எங்கள் வீட்டில் இருந்து மனுதாரருக்கு 5.1/2 பவுன் தங்க நகைகள் போடப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு நிச்சயம் செய்யப்பட்ட நிச்சயமானது இருதரப்பாலும் பேசப்பட்டு நிறுத்தப்பட்டது என்றால் வெளிநாட்டலிருந்து விமான வசதி கொரணா நேரத்தில் இல்லாததால் செய்யப்பட்ட நிச்சயம் நிறுத்தப்பட்டது. அந்த சமயத்தில் 5.1/2 பவுன் நகையை எங்கள் வீட்டில் திரும்ப வாங்கிக்கொண்டார்கள் என்றால் சரிதான். பின்னர் மீண்டும் திருமணம் பேசப்பட்டு திருமணத்தின்போது மனுதாரருக்கு 11 பவுன் தாலிச்செயினும், திருமாங்கல்யம் அரை பவுன் போட்டோம். அதை தவிர வேறு நகை என் மனைவிக்கு கொடுத்தேனா என்றால் நிச்சயத்தின்போது போடப்பட்டு டாலருடன் கூடிய 5.1/2 பவுன் சங்கிலியை வீட்டில் பீரோவில் வைத்துச் சென்றேன். நான் வெளிநாட்டில் இருக்கும்போது என் மனைவி அந்த டாலர் சங்கிலியை அணிந்து என்னிடம் போனில் காட்டியுள்ளார். திருமணம் முடிந்த 3 வது நாளில் என்ன பிரச்சனை என்றால் எந்த பிரச்சனையும் நடக்கவில்லை. திருமணம் ஆன 3 வது நாளில் நான் என் தந்தையிடம் சொத்தை பிரித்துத் தரச்சொல்லி பிரச்சனை செய்ததாகவும் அந்த பிரச்சனையில் நான் என் மனைவியை அடித்து தாக்கியதாகவும் சொன்னால் சரியல்ல. ஜான் போஸ்கோ என்பவர் எனது சித்தப்பா. சொத்து சம்மந்தமாக பிரச்சனை நடந்தபோது எனக்கு என் சித்தப்பா போன் செய்தாரா என்றால் இல்லை. என் தந்தையிடம் இருந்து திருமணமான 1.1/2 மாதம் கழித்து என் அப்பாவிடம் இருந்த சொத்தை என் பெயருக்கு எழுதி வாங்கினேன். நான் பிரச்சனை செய்ததால்தான் என் அப்பா

சொத்தை எழுதிக்கொடுத்தார் என்றால் இல்லை. என் சம்பாத்தியத்தை வைத்து என் அப்பா பெயரில் வாங்கப்பட்ட சொத்தைத்தான் என் பெயருக்கு எழுதிக் கொடுத்தார். அவ்வாறு ஏற்பட்ட சொத்து பிரச்சனையில்தான் மனுதாரரை நான் அடித்தேன் என்றால் சரியல்ல. போஸ்கோ தொலைபேசியில் என்னை தொடர்புகொண்டதாகவும் அவரிடம் நான் உங்கள் வேலையை பாருங்கள் எனச் சொன்னேன் என்றும் சொன்னால் சரியல்ல. திருமணத்திற்கு முன்னர் நானும் மனுதாரரும் தொலைபேசியில் பேசி புரிதலுடன் இருந்தோமோ என்றால் புரிதலுடன் இருந்தோம். நாங்கள் திருமணம் முடிந்து வாழ்ந்துவந்த காலத்தில் 2022 ஆகஸ்ட் மாதத்தில் மனுதாரருக்கு கர்ப்பப்பையில் கட்டி இருந்து இரத்தக்கசிவு ஏற்பட்டது என்றால் சரிதான். இந்த மருத்துவ பரிசோதனைக்கு முன்னர் மனுதாரருக்கு உடல் அளவில் குறைபாடு இல்லை என்றால் சரிதான். நாங்கள் சேர்ந்து வாழ்ந்து வந்த காலத்தில் நான் மனுதாரருக்கு எந்தவித உதவியும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் சேர்ந்து வாழ்ந்த 3 மாத காலத்தில் மனுதாரரை சிகிச்சைக்கு எங்கேயாவது அழைத்துச்சென்றேனா என்றால் ஒருமுறை பிசியோதெரபிஸ்ட்டிடம் கூட்டிப்போனேன். கால்வலி மற்றும் கழுத்துவலிக்கு கூட்டிப்போனேன். மனுதாரருக்கு நான் சொல்வதுபோல் எந்த வலியும் கிடையாது என்றும் நான் உண்மையிலேயே கூட்டிப்போய் இருந்தால் எந்த மருத்துவர் என குறிப்பிட்டுச்சொல்லியிருப்பேன் என்றாலும் சரியல்ல. எனக்கு மாதம் 3.1/2 லட்சம் வந்தது. ஒருமுறை சென்றுவருவதற்கு ரூ.2 லட்சம் செலவாகும். நான் செலவை அதிகமாக சொல்கிறேன் என்றாலும், ரூ.50000/- மட்டும்தான் ஆகும் என்றால் சரியல்ல. நான் மனுதாரருக்கு விசா கிடைத்தவுடன் வெளிநாட்டிற்கு கூட்டிப்போவதாக உறுதி அளித்திருந்தேன் என்றால் சரிதான். எனக்கும் என் மேலதிகாரிக்கும் ஜூன் மாத இறுதியில் பிரச்சனை தீவிரமடைந்தது என்றால் சரிதான். என் மனைவிக்கு மே மாதம் விசா கிடைத்தது என்றால் சரிதான். மேமாதத்திலிருந்து ஜூன் மாதம் இறுதி வரை என் மனைவியை அழைத்துச்செல்ல ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். நான் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் மனுதாரருடன்

சேர்ந்து வாழ விருப்பம் இல்லாததால்தான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கை 2023ல் என் மனைவி தாக்கல் செய்து 2 வருடம் கழித்துதான் அவருடன் சேர்ந்து வாழவேண்டுமென ஐடிஓபி.96/2025 வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த மனு நகல்தான் என்னிடம் காண்பிக்கப்படுவது என்றால் சரிதான். அது மசாஆ.10. நான் தாக்கல் செய்த எதிர்உரையில் ஏதாவது ஒரு இடத்திலாவது நான் மனுதாரருடன் சேர்ந்து வாழ தயாராக இருப்பதாகவும் அதற்கான காரணத்தையும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. ஆனால் சேர்ந்து வாழ தயாராக இருக்கிறேன். எதிர்உரையில் என் மனைவிக்கு எந்தஒரு கடமையையும் செய்துள்ளதாக சொல்லி உள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எதிர்உரையில் என் மனைவியுடன் அன்பாகவும் பாசமாகவும் இருந்ததாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. உண்மையிலேயே மனுதாரரிடம் எனக்கு அன்பும் பாசமும் கிடையாது என்றும், அவ்வாறு இருந்திருந்தால் எதிர்உரையில் சொல்லியிருப்பேன் என்றும் சொன்னால் 45 சரியல்ல. மதசாஆ.4 புகைப்படத்தில் என்னுடன் வெள்ளை சட்டை அணிந்து நிற்பவர் மோகன் சி.லாசரஸ் என்றால் சரிதான். அந்த புகைப்படத்தை நான் விரும்பித்தான் எடுத்தேன் என்றால் சரிதான். மோகன் சி.லாசரஸ் கிறிஸ்துவ பிரிவினை சபையில் தமிழ்நாட்டில் ஒரு முக்கியமான போதகர் என்றால் தெரியாது. மதசாஆ.4 புகைப்படத்தில் திருமணத்திற்கு முன்னர் என் மனைவிக்கு நான் அனுப்பியது என்றால் நான் அனுப்பவில்லை. திருமணத்திற்கு முன்பு என் மனைவிக்கு கத்தோலிக்க திருச்சபை அல்லாத ஜெபக்கூட்டங்களுக்கு செல்லும் பழக்கம் இருந்தது தெரியும் என்றால் எனக்கு தெரியாது. திருமணத்திற்கு முன்பு கத்தோலிக்க திருச்சபை அல்லாத ஜெபக்கூட்டங்களுக்கு செல்லும் பழக்கம் இருந்தது என்றும் அதை அனுமதித்ததால்தான் என் மனைவி திருமணத்திற்கு ஒப்புதல் கொடுத்தார் என்றால் சரியல்ல. மதசாஆ.4 புகைப்படம் மனுதாரரிடம் எப்படி சென்றது என்றால் எனக்குத் தெரியாது. நான்தான் கொடுத்தேன் என்றும் தற்போது வழக்கிற்காக தெரியாது என்றும் சொல்லி வருகிறேன் என்றால் சரியல்ல.

கத்தோலிக்கர் அல்லாத ஜெபக்கூட்டங்களுக்கு போகக்கூடாது என மனுதாரரை நான் கட்டாயப்படுத்தினேனா என்றால் இல்லை. போகமாட்டோமே ஏன் போனாய் என்று கேட்டேன். மனுதாரர் கத்தோலிக்கர் அல்லாத திருச்சபை கூட்டங்களுக்கு தற்போதும் போய்க்கொண்டுதான் இருக்கிறார் என்றால் எனக்கு தெரியாது. கத்தோலிக்கர் அல்லாத ஜெபக்கூட்டங்களுக்கு மனுதாரர் போவதால் எனக்கு என்ன பிரச்சனை என்றால் பிரச்சனை எதுவும் கிடையாது. இருதரப்பாருக்கும் கல்லறை வேறு வேறு, குழந்தை பேர் வைப்பதும் வேறு, வேறு அதனால் ஏன் அங்கு செல்கிறாய் எனக்கேட்டேன். மதசாஆ.6 வாட்ச்அப் மெசேஜ் நானும் என் மனைவியும் செய்து கொண்டது என்றால் சரிதான். மதசாஆ.6 வாட்ச்அப் மெசேஜில் என் மனைவியை வீட்டுக்கு காவலுக்கு நாயாக வைத்துள்ளேன் என்று அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். கேசுவலாக அவ்வாறு மெசேஜ் அனுப்பினேன். என் மனைவியும் என்னை ஒத்தக்குரங்கு என திட்டியுள்ளார். அந்த மெசேஜில் டைவர்சுக்கு ரெடியாக இரு என நான் அனுப்பினேன் என்றால் சரிதான். மசாஆ.9 இ–மெயில் தகவல் நான் அனுப்பியது என்றால் சரிதான். கடந்த 09.09.2022 ம் தேதி மதசாஆ.9 ல் என் மனைவிக்கு நான் அனுப்பிய மின்னஞ்சலில் இனிமேல் என் வீட்டில காவ் வச்சா தலை இருக்காது என அனுப்பினேன் என்றால் சரிதான். 2022 ஜூன் மாதத்திற்கு பிறகு என் மனைவிக்கு அன்றாட தேவைக்கு பணம் அனுப்பி வைக்கவில்லை. என் மனைவி அவரது வங்கி கணக்கு விவரங்களை கொடுத்துள்ளார் என்றும் நான் அவர் பெயருக்கு ரூ.4 லட்சத்தை வைப்பீடு செய்ததாக பொய்யாகச் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. மதசாஆ.8 என் மனைவி எனக்கு அனுப்பிய மெயில் என்றால் சரிதான். மதசாஆ.8 ல் அந்த வார்த்தைகளை பார்த்தால் என் மனைவி கடுங்கோபமாக அனுப்பியுள்ளார் என்றால் அதுபோன்று இல்லை. என் மனைவிக்கு விசா டிசம்பர் 2022 வரை இருந்தது என்றால் சரிதான். டிசம்பரில் வந்து விடுவதாகச்சொன்னேன் என்றால் சரிதான். ஏன் நான் டிசம்பரில் வரவில்லை என்றால் வெளிநாட்டில் வேலை செய்வதற்கு மேலும் 4 மாதம் நீட்டிப்பு கிடைத்ததால் என்னால் வர இயலவில்லை. என் மனைவியுடன்

வாழ பிடிக்கவில்லை என்பதால்தான் நான் டிசம்பரில் இந்தியா வரவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர் என்னுடைய மொபைல் நம்பரில் உள்ள வாட்ஸ்அப்பை மட்டும் பிளாக் செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் மனுதாரருக்கு இரண்டுமுறை போன் செய்தேன். அவர் எடுக்கவில்லை. மனுதாரர் போனை எடுக்கவில்லை என்பதால் 3ம் நபர் மூலமாக அவரை தொடர்பு கொள்ளவில்லை என்றால் சரிதான். வேறு நபர்கள் மூலமாக என் மனைவியை தொடர்பு கொள்ள முயற்சி எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. அதற்கு என் மனைவி என்னிடம் பேசுவதற்கு தயாராக இல்லை என்று சொல்லிவிட்டார். 2023ம் வருடம் ஏப்ரல் 27, 28ல் இந்தியா வந்தேன் என்றால் சரிதான். இந்த சமயத்தில் எனக்கும் என் மனைவிக்கும் இருந்த பிரச்சனை மிகப்பெரிய பிரச்சினையாக இருந்தது என்றால் சரியல்ல. எனக்கும் என் மனைவிக்கும் இடையே Miscommunication இருந்தது. 3ம் நபர் மூலமாக என் மனைவி எங்கிருக்கிறார் என்ற விவரத்தை தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரியல்ல. எனது நெருங்கிய உறவினர்கள் 150 பேர்கள் இருப்பார்களா என்றால் அதற்கும் அதிகமாக இருக்கிறார்கள். இந்தியா வந்த உடனே ஏன் என் மனைவியை சென்று பார்க்கவில்லை என்றால் விமானத்தில் பயணம் செய்து வந்ததால் ஒரு நாள் முழுவதும் தூங்கிவிட்டுத்தான் மறுநாள் சாதாரண வேலையை பார்க்கமுடியும். மனுதாரர் வீட்டுக்கு நான் வேறு எந்த நபரையும் அழைத்துச்செல்லவில்லை என்றால் சரிதான். அன்றைய தேதியில் நான் மனுதாரர் வீட்டுக்கு என்னுடைய வீட்டு சாவியையும் இருசக்கர வாகன சாவியையும் அசல் ஆவணங்களை பெறுவதற்கும்தான் சென்றேன் என்றால் சரியல்ல. மனுதாரர் வீட்டுக்கு சென்றபோது என் மனைவி ஆவணங்களையும் சாவியையும் தராததால் தெருவில் வைத்து என் மனைவியை அசங்கமாக திட்டினேன் என்றால் சரியல்ல. நிலக்கோட்டையில் ஒரு வழக்கறிஞரிடம் பேசியபோது டிவோர்ஸ் வேண்டும் என்றுதான் கேட்டேன் என்றால் இல்லை. கடந்த 3.5.2023க்கு பிறகு கடந்த 2025 ஆக்ஸ்ட் மாதம் வரை 3ம் நபர்கள்

மூலமாக நாங்கள் சேர்ந்து வாழ நான் பேச்சுவார்த்தை நடத்தவில்லை என்றால் சரியல்ல. நடத்தினோம். யாரை வைத்து நடத்தினேன் என்றால் நான்தான் கூப்பிட்டேன். என் மனைவி வரவில்லை. யார் மூலமாக பேச்சுவார்த்தை நடத்தினேன் என்றால் என் பெரியப்பா சேசு, அவரது மகன் டேவிட் மூலமாக பேசினேன். என்னுடைய பெற்றோர், சகோதரர் மூலமாக பேச்சுவார்த்தை நடத்தவில்லை என்றால் சரிதான். என் மனைவியின் பெற்றோர்கள் அவரது உறவினர்கள் என்னை கொலை செய்து விடுவதாக மிரட்டியதால் என் பெற்றோரை அழைத்துச்செல்லவில்லை. நான் நிலையான மனநிலையில் இல்லாதவர் என்பதால்தான் என் தரப்பில் யாரும் பேச்சுவார்த்தைக்கு வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்த விவரத்தை என் மனைவிக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் தெரிவித்தேன். நான் வெளிநாட்டில் இருந்தபோது என் மனைவி தன்னை அழைத்துப் போகச்சொல்லி கேட்டார் என்றால் சரிதான். என் மனைவி என்னுடன் சேர்ந்து வாழவேண்டும் என்ற எண்ணத்துடன்தான் கேட்டார் என்றால் சரிதான். ஆனால் நான் என் மனைவிக்கு அனுப்பிய மெசேஜ் மற்றும் பேசிய வார்த்தை, செயல்கள் மூலமாக கொடுமை செய்தேன் என்றும் அதனால்தான் என் மனைவி என்னுடன் சேர்ந்து வாழ முடியாது என்று இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் மரியதாஸ் மூலமாக மனுதாரரிடம் பேச்சுவார்த்தை நடத்தியது பற்றி என்னுடைய ஆட்சேபனையில் கூறவில்லை என்றும் நிரூபண வாக்குமூலத்தில் மட்டும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். மரியதாசிடம் என் மனைவி முதலில் சேர்ந்து வாழ வருவதாகவும் பிறகு 2 நாட்கள் கழித்து சேர்ந்து வாழ விருப்பமில்லை என்றும் தெரிவித்தார். என் மனைவியுடன் சேர்ந்து வாழ தாக்கல் செய்த மனுவை 2.1/2 வருடம் கழித்து ஏன் தாக்கல் செய்தேன் என்றால் சேர்ந்துவாழ பேச்சுவார்த்தை நடத்தினோம். ஐடிஓபி.96/2025 மனுவை நான் தாக்கல் செய்ததற்கு காரணம் மேலும் மனுதாரரை மனவேதனை படுத்த தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. மனுதாரரை மனதளவில் கொடுமைப்படுத்திய

காரணத்தினால் இம்மனுவை அனுமதிக்கவேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை :– இல்லை

A MUTHUSARATHA
Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.11.20 19:22:29 +0530

Principal District Judge,
Dindigul.